# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :29 January 2026
கோட்டை:8 வாயில்:29 ஜனவரி 2026

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# நுண்கலை

# கதாகாலஷேப நிகழ்ச்சிகளில் மிருதங்கத்தின் பங்கு

# *The role of Mridangam in Kathakalashepa performances*

*G. Venkatesh Babu,*

*Research Scholar, Kalaikaviri Fine Arts College, Tiruchirappalli - 620 001.*

***Guide: Dr. S. Umamaheshwari,** Principle, Kalaikaviri Fine Arts College, Tiruchirappalli - 620 001.*

**கோ. வெங்கடேஷ்பாபு,**

*முனைவர்பட்ட ஆய்வாளர், கலைக்காவிரி நுண்கலை கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620 001.*

***நெறியாளர்: முனைவர். ச. உமாமஹேஸ்வரி,** முதல்வர், கலைக்காவிரி நுண்கலை கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620 001*

*Abstract*

*The Vedas are the foundation of Hinduism. The Vedas are the texts that explain the principles, justice, and morality in human life. The Puranas and Itihasas were created by ancient scholars to explain morality in the minds of the people through these Vedas. The central idea that one who practices morality will ultimately achieve excellence. One who practices unrighteousness will ultimately be degraded and destroyed is expressed through various characters in the Puranas and Itihasas.*

*The one who reveals the Puranas and Itihasas will have the power to become a character in a Purana by acquiring knowledge of many languages, many Puranas with illustrations, and by acquiring knowledge of music and rhythm. He is called Bhagavathar in modern times. The event that he performs is called "Kathakalashepa ceremony".*

*The people responsible for the emergence of this art form, which originated in the state of Maharashtra, in Tamil Nadu are mentioned, as well as the appearance of the Bhagavatar,*

*the stage layout, the musical instruments, percussion instruments and seating arrangements used by the 11 Swathi artists when the Kathakalashepam event is performed.*

*The musical forms used by the Bhagavatas in the Kathakalashepa program, the rhythms they use, and the way the mridangam is played to them are explained.*

*The aim of this article is to convey the message that this art form, which originated in a neighboring state, is being used as a form of devotional music in Tamil Nadu, and to explain the use of mridangam in this art form.*

***Keywords***

*Puranas — Itihasas, Kathakalatshepa, Bhagavata, Mridangam, three-foot rhythm, five-foot rhythm, eight-foot rhythm, Panchapati, Prathamapatham, Nirupanam.*

.

**ஆய்வுச் சுருக்கம்**

இந்து சமயத்திற்கு ஆதாரமாக விளங்குவது வேதங்களாகும். மனித வாழ்வில் உள்ள நெறிகளையும், நீதிகளையும், தர்மங்களையும் உரைப்பனவாக வேதங்கள் திகழ்கின்றன. இவ்வேதங்களின் வழியாக மக்களின் மனதில் அறத்தை விளங்கவைக்க பண்டைய அறிஞர்களால் எழுந்தவை புராண-இதிஹாஸங்களாகும். அறத்தைத் கைக்கொள்பவன் இறுதியில் சிறப்புப் பெறுவான். அதர்மத்தை ஒழுகுபவன் இறுதியில் தாழ்வுற்று அழிவான் என்ற மையக் கருத்தை பல்வேறு பாத்திரங்களின் வாயிலாக வெளிப்படுத்துவது புராண-இதிஹாஸங்களாகும்.

புராண-இதிஹாஸங்களை வெளிகொணர்பவர் பல மொழிகளையும், பல புராண கதைகளை உவமானத்துடனும், இசை அறிவு, தாள அறிவு பெற்று புராண கதையின் கதாபாத்திரமாக மாறும் ஆற்றல் மிக்கவராய் இருப்பார். அவரை தற்காலத்தில் "பாகவதர்" என்று அழைக்கின்றனர். அவர்களால் நடத்த பெறும் நிகழ்விற்கு "கதாகாலக்ஷேப நிகழ்ச்சி" என்று பெயர்.

மராட்டிய மாநிலத்தில் தோன்றிய இக்கலையானது தமிழ்நாட்டில் தோன்றுவதற்கு காரணமானவர்களை பற்றியும், கதாகாலக்ஷேபம் நிகழ்வு நடத்தப்படும் பொழுது பாகவரின் தோற்றமும் மேடையின் அமைப்பும், பக்கவாத்திய கலைஞர்கள் பயன்படுத்தும் இசைக் கருவிகள், தாள கருவிகள், அமரும் இடமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கதாகாலக்ஷேப நிகழ்ச்சியில் பாகவதர்கள் பயன்படுத்தும் இசை உருப்படிகளும் அவர்கள் பயன்படுத்தும் தாள வகைகளும், அவற்றிற்கு மிருதங்கம் வாசிக்கும் முறையும் விளக்கப்பட்டுள்ளது.

இதன் வழியாக அண்டை மாநிலத்தில் தோன்றிய இக்கலைவடிவம் தமிழ்நாட்டில் பக்தி இசை வடிவங்களாக பயன்படுத்தப்படுகின்றன என்ற செய்தியையும், இக்கலை வடிவத்திற்கு மிருதங்கத்தின் பயன்பாட்டையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

புராண - இதிஹாஸங்கள், கதாகாலட்ஷேபம், பாகவதர், மிருதங்கம், மூன்றடி தாளம், ஐந்தடி தாளம், ஏழடி தாளம், பஞ்சபதி, பிரதமபதம், நிருபணம்.

**முன்னுரை**

மக்கள் அறத்தை எளிதில் அறிந்துணர்ந்து அறத்தை மனதில் வேரூன்ற செய்வதற்கென எழுந்தவை புராண-இதிஹாஸங்களாகும். இப்புராண-இதிஹாஸங்களை மக்களின் முன்பாக வெளிக்கொணரும் ஒப்பற்றதொரு கலையாக கதாகாலஷேபம் திகழ்கின்றன. இந்நிகழ்வை நடத்துபவரை பௌராணிகர், புராணப்பிரசங்கி, உபன்னியாஸகர் போன்ற பல பெயர்களில் அழைத்தாலும் தற்காலத்தில் “பாகவதர்” என்றும், கதாகாலஷேபம் நிகழ்வை “ஹரிகதை” (அல்லது) “ஹரிகதாகாலஷேபம்” என்ற பெயர்களிலும் அழைக்கின்றனர். மராட்டிய மாநிலத்தில் தோன்றிய இக்கலை தஞ்சையில் எழுச்சி பெற்று பல கதாகாலஷேப பாகவதர்கள் உருவானதற்கு காரணமாயிற்று. இக்கலை பல புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு இசையறிவும், தாள அறிவும் ஒன்றிணைந்த கலை வடிவமாகும். இக்கலையின் இசை வடிவங்களையும், அவற்றிற்கு பயன்படுத்தப்படும் தாளங்களையும், இசைக்கருவிகளையும் இக்கட்டுரையில் விளக்கப்படுகின்றன.

**கதாகாலஷேபம் தோற்றமும் வளர்ச்சியும்**

கீர்த்தன் என்றால் மராட்டிய மொழியில் “இறையைப் போற்றும் பாடல்” என்று பெயர் (N. ஸ்ரீனிவாசன், கதாகாலசேபக்கலையும், கலைஞர்களும், பக்கம் :14) கீர்த்தன் நிகழ்விற்கான நிரூபணங்களை பண்டைய ஞானிகளும், மடாதிபதிகளும் மற்றும் பலரும் இயற்றியுள்ளனர். நிரூபணம் என்பது மராட்டிய சொல்லில் “இறைத் தொடர்புடைய கதையை இனிய சங்கீதத்துடனும், ஸாஹித்தியத்துடனும் விவரித்து உரை செய்தல்” என்று பொருள்படுகின்றது. (N. ஸ்ரீனிவாசன், கதாகாலசேபக்கலையும், கலைஞர்களும், பக்கம் :19) ஹரிகதையின் தொடக்கத்தில், அதன் சுருக்கத்தை விளக்குவதற்காக பாடும் பாடலே நிரூபணமாகும். கோபாலகிருஷ்ண பாரதியின்

“பழன மருகனையும்”

என்பது நிரூபணத்திற்கான எடுத்துக்காட்டாக டாக்டர் U.V. சாமிநாத ஐய்யரால் குறிப்பிடப்பட்டுள்ளது. (பிரமிளா குருமூர்த்தி, கதாகாலஷேபம், பக்கம் : 43) தஞ்சையில் 1675ஆம் ஆண்டு முதல் 1830ஆம் ஆண்டு வரையில் உள்ள இடைப்பட்ட காலத்தில் நந்தன் மேரு ஸ்வாமி, ஆனந்த நந்தனார், பீமாராஜ் ஸ்வாமிகள், மாதவஸ்வாமி, மேரு ஸ்வாமி மற்றும் பலர் பல நிரூபணங்களை இயற்றியுள்ளனர்.

ஒரு சமயம் கிருஷ்ண பாகவதர் அவர்களால் ராம் சந்திர பாவாவின் கீர்த்தன் நிகழ்ச்சிகளை கேட்கும் போது தமிழில் இதுபோன்ற நிகழ்வை அமைக்க வேண்டும் என்று எண்ணினார். அதற்கு பக்கபலமாக கிருஷ்ண பாகவதரின் தந்தை வேங்கட தாஸர் என்னும் பெரியண்ணா அவர்கள் பல கதைகளை செய்யத் தொடங்கினார். இவர்களின் மூலமாக ஹரிகதாகாலஷேபம் என்னும் கலை வளர்ந்தது. (N. ஸ்ரீனிவாசன், கதாகாலசேபக்கலையும், கலைஞர்களும், பக்கம் :21) பாவாக்களின் நிகழ்ச்சி கீர்த்தன் என்றால், பாகவதர்கள் தோற்றுவித்தது ஹரிகதா ஆகும். பெரியண்ணா அவர்களே ஹரிகதாகாலஷேபம் என்று பெயரிட்டு மகிழ்ந்தனர். (N. ஸ்ரீனிவாசன், கதாகாலசேபக்கலையும், கலைஞர்களும் பக்கம் :21) கீர்த்தனைகளில் காணப்படும் பல அம்சங்கள் ஹரி கதையிலும் எடுத்துக்கொள்ளப்பட்டன. பஞ்சபதி நாமஸித்தாந்தமும், பூர்வ பீடிகையும், மராட்டி நிருபணங்களும், பிறமொழி பாடல்களும் சமவிகிதத்தில் இடம்பெற்றன.

பாகவதர் பஞ்சகச்சமாக வேஷ்டியை உடுத்தி, மார்பின் குறுக்கே ஒரு அங்கவஸ்திரத்துடன், கையில் சிப்ளாவும், கால்களில் கஜ்ஜையுமாக ஒரே இடத்தில் நின்றவாறு ஹரிகதை செய்வார். கர்நாடக இசையிலான மெட்டுகளும், சில சமயங்களில் பாடலுக்கு ஏற்ப தெம்மாங்கு, காவடி சிந்து போன்ற கிராமிய மெட்டுகளும் இடம்பெறுகின்றன. சமஸ்கிருதத்திலும், ஹிந்தியிலும் எம்பார் விஜயராகவாச்சாரியார் அவர்களும், தெலுங்கில் தஞ்சை வீராசாமி ராஜாஜி அவர்களும், ஆங்கிலத்தில் முனைஞ்சிப்பட்டி சுப்பையா பாகவதர் அவர்களும், டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களும் ஹரிகதை நிகழ்ச்சி நடத்தியுள்ளனர். (N. ஸ்ரீனிவாசன், கதாகாலசேபக்கலையும், கலைஞர்களும், பக்கம் :22)

ஹரிகதைக் கலையில் உள்ள முறைமைகளை மட்டுமே கிருஷ்ண பாகவதர் தோற்றுவித்தார். ஹரிகதை என்னும் சொல் 400 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த புரந்தரதாசர் "ஹரிகதா சிரவணமாடோ" என்று பாடியுள்ளார் (N. ஸ்ரீனிவாசன், கதாகாலசேபக்கலையும், கலைஞர்களும், பக்கம் :23). அதே காலத்தில் வாழ்ந்த துகாராம், ஸமர்த்த ராமதாஸர் போன்றோர் ஹரிகதை என்ற சொல்லை உபயோகப்படுத்தியுள்ளனர் என்று நூலின் வழி அறிய முடிகின்றது மற்றும் சைவசமய தொடர்புடைய இசை பேருரைகள் "சிவ கதைகள்" என்று அழைக்கப்பட்டன. பிற்காலத்தில் "ஹரிகதாகாலஷேபம்" என்பது அறிமுகமானதும் சைவ, வைஷ்ணவ சார்புடைய எல்லா கதைகளுமே பொதுவாக "ஹரிகதாகாலஷேபம்" என்றே குறிக்கப்பட்டன என்பது நூலின் வழி அறிய முடிகிறது. (N. ஸ்ரீனிவாசன், கதாகாலசேபக்கலையும், கலைஞர்களும், பக்கம் : 23)

**இசை உருப்படிகள்**

கதாகாலஷேபத்தில் இடம்பெறும் இசை வடிவங்கள் அனைத்தும் சிறிய பாடல்களாக இடம் பெறுகின்றன. இப்பாடல்கள் பல்லவி, அனுபல்லவி என்ற அங்க அமைப்புடனும், சில பாடல்கள் பல்லவி, சரணம் என்ற அங்க அமைப்புடனும் அமைந்துள்ளது. நிகழ்ச்சியின் துவக்கத்தில் புண்டரீகம், நாமாவளி, பஞ்சபதி, பிரதமபதம், ஆர்யம், சுலோகம், பத்யம், விருத்தம், அபகங்கம், டோரா, ஓவி மற்றும்

மராட்டிய வடிவங்களான சவாயி, கட்கா, லாவணி, சாகி, திண்டி, தில்லானா போன்ற இசை உருப்படிகள் பெறுகின்றன.

**பஞ்ச பதி**

கணபதி, விஷ்ணு, சரஸ்வதி, குரு, ஆஞ்சநேயர் போன்ற தெய்வங்களின் மேல் பாடப்படும் ஐந்து பாடல்களை பஞ்சபதி என்று அழைக்கின்றனர். இறைவனை அழைப்பதற்காக பாடப்படுகின்றன. இப்பாடல்கள் மத்திம காலத்தில் ஆரம்பித்து இறுதியில் அதிதுரித காலத்தில் முடிவடைகின்றன.

1. "ஹிமகிரி தனயா"

ராகம் : தன்யாசி

தாளம் : மூன்றடி தாளம்

2. "மோரேஷ்வர மௌலி ஜே ஜே"

ராகம் : தன்யாசி அல்லது எமன் கல்யாணி

தாளம் : மூன்றடி தாளம்

3. "தாண்டவ நிர்த்யகரி"

ராகம் : கானடா

தாளம் : மூன்றடி தாளம் அல்லது ஏழடி தாளம்

4. "கதா கத்துனி வந்திழி சரஸ்வத" - சரஸ்வதி துதி

5. "பல பீமா பல பீமா"

ராகம் : ஜோன்புரி

தாளம் : உசி தாளம் (பிரமிளா குருமூர்த்தி, கதாகாலஷேபம், பக்கம் : 64, 65)

**பிரதம பதம்**

பிரதம பதம் என்பது கதையின் ஆரம்பமும் முடிவுமாக அமைந்தது பிரதமபதமாகும். கதையின் நாயகனை பற்றியோ அல்லது கதையின் நாயகியை பற்றியோ பாடுவதாகும். உதாரணமாக மீனாட்சி கல்யாண வைபவத்தை எடுத்துக்கொள்வோம்.

"பஜமனுஜா பஜமனுஜா மீனாட்க்ஷபதிம் பஜமனுஜா"

என்ற பாடலின் மீனாட்ஷபதிம் என்பது சிவனை குறிப்பதாகும். ஹஜனுத வைப்பவம் என்பது "ஆபத் பாண்டவம் வரதமுதாரம்" போன்ற பல வாக்கியங்கள் சிவனைப் பற்றி குறிப்பிட்டு, கதையின் இறுதியில் இக்காரணத்திற்காகத் தான் சிவனை வழிபட வேண்டும் என்று முடிப்பர். இக்கதையின்

தொடக்கம் சிவனை பற்றி குறிப்பிட்டும், விளக்கியும், இறுதியில் சிவனைப்பற்றியே முடிகின்றது. இதுவே பிரதமபதமாகும். (நேர்கானல் : சுஜித்ரா)

பிறகு கதைக்கு தொடர்புடைய மற்ற இசை வடிவங்களை ஸ்லோகங்களாகவும், விருத்தங்களாகவும், பாடலாகவும் பாடுவர்.

**ஓவி**

இது கதாகாலட்க்ஷேபத்தில் உருவான வடிவமாகும். இது விருத்தமாகவோ, ஸ்லோகமாகவோ பாடப்படுகின்றன. இவற்றில் தாளம் இடம்பெறாது.

"திரௌபதி மஹா சம்ரக்ஷக"

**சாகி**

மிகவும் பிரபலமான மராட்டி வடிவமாகும். "சரப சாஸ்தி" என்னும் 63 நாயன்மார்களை பற்றி 700 முதல் 800 சாகிக்களை இயற்றியதாக கூறப்படுகின்றது. இவ்வுருபடியானது நாடகங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது. சாகி என்னும் உருப்படி வகையை போன்று பல உருப்படி வகைகள் ஹரி கதையில் கையாளுகின்றனர்.

**மேடை அமைப்பு**

தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர் முதன் முதலாக மேடையில் பக்க வாத்தியகாரரை அமர செய்வார். இவர்களுக்கு முன் பாகவதர் நின்று கொண்டிருப்பார். இவர்களுக்குப் பின் வரிசையில் வலது புறத்தில் மிருதங்க கலைஞர் வீற்றிருப்பார். வயலின் கலைஞர் அல்லது ஹார்மோனிய கலைஞர் அல்லது இருவரும் பாகவதரின் இடதுபுறத்தில் அமர்ந்திருப்பர். இவர்களுக்குப் பின்னால் உப பாகவதர்கள், ஜால்ரா வாசிப்பவர் இடதுபுறமும், தம்புரா வாசிப்பவர் வலதுபுறத்திலும் நிற்பர்.

**இசைக்கருவிகள்**

கதாகாலஷேபம் நிகழ்விற்கு ஸ்ருதி வாத்தியங்களாக வயலின் மற்றும் ஹார்மோனியமும், தாள வாத்தியங்களாக மிருதங்கம், சிப்லா, ஜால்ரா பயன்படுத்தப்படுகின்றன.

**கதாகாலஷேபத்தில் பயன்படுத்தப்படும் தாளங்கள்**

1. மூன்றடி தாளம்
2. ஐந்தடி தாளம்
3. ஏழடி தாளம்

**மூன்றடி தாளம்**

இத்தாளம் 4 அட்சரங்களைக் கொண்டது. அதாவது மூன்று தட்டும் ஒரு மடக்கையும் கொண்டது. இது விளம்ப, மத்திம, துரித காலங்களில் பயன்படுத்துகின்றனர்.

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| த | கி | ட | - |

**ஐந்தடி தாளம்**

இத்தாளம் ஆறு அட்சரங்களைக் கொண்டது. அதாவது ஐந்து தட்டையும், ஒரு மடக்கையும் கொண்டது.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| த | க | த | கி | ட | - |

**ஏழடி தாளம்**

இத்தாளம் எட்டு அட்சரங்களைக் கொண்டது. அதாவது ஏழு தட்டையும், ஒரு மடக்கையும் கொண்டது. இத்தாளம் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் ஆதி தாளத்தை ஒத்து காணப்படுகின்றது.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| த | க | தி | மி | த | கி | ட | - |

**உசி நடை**

அபங்கப் பாடல்கள் பொதுவாக தாளத்தின் சமத்தில் அமையப் பெற்றிருக்காது. அதே போல் தாளத்தின் கால் இடமோ, முக்கால் இடமோ அமையப் பெற்றிருக்காது. தாளத்தின் அரையிடத்தில் அமையப்பெற்றிருக்கும். அவ்வாறு அமையப்பெற்றிருக்கும் பாடலின் எடுப்பு இடம் தற்காலத்தில் விஷம எடுப்பு என்று அழைப்பர். அதனை “உசி நடை” என்று அழைப்பர். அதே போல் தாளத்தின் அங்கத்தில் பாட்டு அமைந்திருந்தாலும் தாளத்தின் லகு, திருதம் போன்ற அங்கங்களின் பயன்பாடு காணப்படுவதில்லை. பாகவதரின் ஜால்ராவில் வரும் ஒலியானது “தா தாம் தா” என்று அமையப் பெற்றிருக்கும்.

$$\frac{\text{தா}}{2} \quad \frac{\text{தாம்}}{4} \quad \frac{\text{தா}}{2} = 8 \text{ மாத்திரைகள்}$$

இதில் வரும் 8 மாத்திரைகள் அளவை தட்டிக் கொண்டே அபங்கப் பாடல்கள் முடிவடைகின்றது. இதில் பாட்டு தொடங்கும் இடம் $\frac{\text{தாம்}}{4}$ என்ற இடத்தில் தொடங்குவார்கள்.

**மிருதங்கத்தின் பங்கு**

கதாகாலஷேபத்தில் மிருதங்கத்தின் பங்கு இன்றியமையாததாகும். பாகவதர் இசைக்கும் சிப்லா அல்லது ஜால்ராவின் ஓசையை கேட்டு கால பிரமாணத்தை கவனித்து தாள நடையை மனதில் கொண்டு வாசிக்க வேண்டிய ஒன்றாகும். ஹரிகதை பாடலின் இறுதியில் தாளத்தின் காலபிரமாணத்தை உயர்த்திக் கொண்டு செல்வர். இறுதியில் பாடலின் ஆரம்ப காலத்தில் வந்து முடிப்பர். மத்திம காலத்திலும், துரித காலத்திலும், அதிதுரித காலத்திலும் பாடலுக்கு ஏற்றார்போல் வாசிப்பதனால் மிருதங்கத்தின் பங்கு இன்றியமையாததாகும். இவற்றில் அதிகம் நடைச் சொற்களும், சிறுசிறு அரிதிகளுமே பயன்படுத்துகின்றன.

மிருதங்கம் வாசிக்கும் முறையில் டேக்கா, மோரா போன்ற வடிவங்கள் மராட்டிய மிருதங்க கலைஞர்களிடம் இருந்து இங்கு வந்திருக்கலாம் என்று இந்நூலின் மூலம் அறியமுடிகிறது. மகாராஷ்டிராவில் இருந்து தமிழ்நாட்டில் குடியேறியவர்களில் சிலர் மிருதங்க கலைஞர்களாக திகழ்ந்தனர். அவர்களுள் நாராயணசுவாமி அப்பா, தஞ்சாவூர் தாஸ் ஸ்வாமி, துக்கராம ரியோ, சேதுராம ரியோ, பாபு ரியோ, விட்டல் ரியோ மற்றும் பலர் ஆவர். (பிரமிளா குருமூர்த்தி, கதாகாலஷேபம், பக்கம் :41) கதாகாலஷேபத்தில் இடையிலேயே கதையை பாடலாகவும், செய்யுள்களாகவும் கூறும்போது மிருதங்கம் இசைக்கப்படுகின்றன. இதை “அவதாரிகள்” என்று அழைக்கின்றனர்.

**தனி ஆவர்த்தனம்**

கதாகாலட்ஷேபத்தில் தனி ஆவர்த்தனம் இடம்பெற்றது என்று நூலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார். (பிரமிளா குருமூர்த்தி, கதாகாலஷேபம், பக்கம் :42) இச்செய்தியை ஹரிகதா நிகழ்வை நடத்திய தஞ்சையில் கமலா மூர்த்தி அவர்களின் பேத்தி சுஜீத்ரா அவர்களிடம் கேட்கும்பொழுது அக்காலத்தில் நடைபெற்றது என்று தனது பாட்டி கூறி கேள்விப்பட்டுள்ளேன் என்றார். உங்களது பாட்டி நிகழ்ச்சியில் நடைபெற்றதா என்று ஆய்வாளர் கேட்கும்பொழுது இல்லை என்று பதில் அளித்தார். அதேபோல் மிருதங்க வித்வான் திருச்சி ஆர். தாயுமானவர் அவர்களிடம் கேட்கும் பொழுது ஹரிகதைக்கு தனி ஆவர்த்தனம் வாசித்து உள்ளனர் என்று கேள்விப்பட்டு இருக்கிறேன் என்று பதிலளித்தார். தற்காலத்தில் தனி ஆவர்த்தனம் வாசிப்பது கிடையாது.

**முடிவுரை**

இக்கட்டுரையில் “கதகாலஷேபம் தோற்றமும், வளர்ச்சியும்” என்னும் தலைப்பில் நிருபணம் பற்றி விளக்கப்பட்டுள்ளது. மராட்டிய வடிவமான கீர்த்தன் கிருஷ்ண பாகவதரால் தமிழ்நாட்டில் வளர்ந்ததை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இசை உருப்படிகள் பஞ்சபதி, பிரதமபதம் பற்றியும் கதைகளில் பயன்படுத்தப்படும் சில இசை உருப்படிகளை பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. மேடை அமைப்பு, இசைக்கருவிகள், கதாகாலஷேப நிகழ்வில் பயன்படுத்தப்படும் தாளங்களை பற்றியும், மிருதங்கத்தின் பங்கு என்னும் தலைப்பில் மிருதங்கம் வாசிக்கும் முறையையும், அக்காலத்தில் டேக்கா, மோரா போன்ற சொற்கள் மகாராஷ்டிராவில் இருந்து வந்திருக்கலாம் என்ற செய்தியையும் குறிப்பிடப்பட்டுள்ளது. கதாகாலஷேபம் என்னும் கலையைப் பற்றி அறிந்து கொள்வதற்காக இக்கட்டுரை எழுதப்பெற்றுள்ளது.

ஆய்வாளரின் கருத்தாக கதாகாலஷேபத்தில் பயன்படுத்தக்கூடிய மூன்றடி தாளம் தற்கால சதுஸ்ர ஏகத்தை ஒத்தும், ஐந்தடி தாளம் தற்கால ரூபக தாளத்தை ஒத்தும், ஏழடி தாளம் தற்கால ஆதி தாளத்தை ஒத்தும் காணப்படுகின்றன. உசி தாளம் அனாகத எடுப்பாக 2 மாத்திரைகள் தள்ளி வரும் அமைப்பை ஒத்தும் காணப்படுகின்றன. மத்திம காலம், துரித காலம், அதிதுரித காலம் போன்ற அமைப்புகள் காணப்படுகின்றன. கதாகாலஷேப நிகழ்வில் வாசிக்க விரும்பும் கலைஞர்களுக்கு கால வேறுபாடு, தாள அமைப்பு போன்றவை தெரிந்துகொள்ளலாம். பல வேறுபட்ட கால பிரமாணத்தில் நடைச் சொற்களும், வேகச் சொற்களும், அரிதிகளும் வாசிக்கும் பொழுது அவர்களின் திறன் மேன்படுகின்றது.

**துணைநூல்கள்**

1. டாக்டர். பிரிமளா குருமூர்த்தி, கதாகாலஷேபம், முதல் பதிப்பு, 1994 வெளியீடு: சர்வதேச சமூகம், 102, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை-600 032.
2. ஹரிகதா , தஞ்சாவூர். N. ஸ்ரீனிவாசன், கதாகாலசேபக்கலையும், கலைஞர்களும், பதிப்பு ஆண்டு, 2001, முதல் பதிப்பு, குட்புக்ஸ் பப்ளிகேஷன்ஸ், AA-96, பிள்ளையார் கோயில் எதிரில் அண்ணாநகர், சென்னை-600 040.

## *References*

1. *Dr. Premeela Gurumurthy — Kathakalakshepa, Published by International Society, 102, Mount Road, Guindy, Madras-600 032.*
2. *Hari Kadha , Thanjavur, N. Srinivasan, Kathakalakshepakalaiyum, Kalaigargalam, Published by Goodbooks Publications, Published year 2001, 1st edition, AA-96, Opp: Pillaiyar Kovil, Annanagar, Chennai-600 040.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com